# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம்
## ஓட்டல் தமிழ்நாடு, உதகமண்டலம்.

## ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல அறிவிப்பு

**எண் :270/ஓ.த /உதகை /2018** **நாள் : 26.09.2018**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் கீழ் இயங்கும் ஓட்டல் தமிழ்நாடு உதகைக்கு சொந்தமான பழைய உபயோகத்திற்கு பின் கழித்து ஒதுக்கிய பழைய மின் சாதனப் பொருட்கள், இரும்புச்சாமான்கள், மரச்சாமான்கள், பழைய உடைந்த பிளாஸ்டிக் பொருட்களை, வரும் **10.10.2018** அன்று காலை 11.30 மணி அளவில் **ஓட்டல் தமிழ்நாடு , உதகை வளாகத்தில் வைத்து ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் விட நிர்வாகத்தினால் முடிவெடுக்கப்பட்டுள்ளது**. மேற்படி ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் ஓட்டல் தமிழ்நாடு ,உதகை அலுவலகத்தில் 08.10.2018 காலை 11.00 மணி **முதல் 10.10.2018 காலை 10.30** மணி **வரை** ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல அறிவிப்பு படிவத்தினை பெற்று கொள்ளலாம். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் (EMD) டெபாசிட் தொகையான **ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)** க்கான வரையோலையுடன் (D.D.) மேற்படி அலுவலகத்தில் 10.10.2018 **காலை 11.00** மணிக்குள் செலுத்த வேண்டும். டெபாசிட் தொகைக்கான வரையோலை செலுத்தியவர்கள் மட்டுமே மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி அளிக்கவும் மற்றும் ஏலத்தில் கலந்து கொள்ளவும் முடியுமென தெரிவிக்கப்படுகிறது. மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 10.10.2018 அன்று **காலை 11.00** மணிக்குள் இவ்வலுவகத்திற்கு வந்து சேர வேண்டும். பிறகு அன்று மாலை **11.30** மணிக்கு பொருட்கள் பொது ஏலம் விடப்படும். பொது ஏலம் முடிந்தவுடன் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பிரித்து பார்க்கப்பட்டு யார் அதிக தொகைக்கு பொது ஏலத்தில் அல்லது ஒப்பந்தப்புள்ளி கொடுத்து இருக்கிறார்களோ , அவருக்கு ஏலப் பொருட்கள் கொடுக்கப்படும்.

**நிபந்தனைகள்:-**

- ஒப்பந்தப்புள்ளி மற்றும் நேரடி ஏலத்தில் கலந்துக்கொள்ள விரும்புபவர்கள் முன்பணமாக ரூ.10,000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)க்கான வரைவோலையை **மேலாளர், ஓட்டல் தமிழ்நாடு, உதகமண்டலம் (The Manager,Hotel Tamilnadu,Ooty)** என்ற முகவரிக்கு எடுத்து இணைக்கப்பட வேண்டும்
- **வரைவோலையை நிர்வாகத்தினரிடம் காண்பித்த பின்னரே ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் பூர்த்தி செய்த ஒப்பந்த படிவத்தை 10.10.2018 காலை 11.00 மணிக்குள் அதற்காக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்க வேண்டும்.**
- ஏலம் முடிந்தவுடன் உடனடியாக முழுத்தொகையை செலுத்திவிட்டு அன்றைய தேதியில் ஏலம் கோரிய பொருட்கள் அனைத்தையும் ஓட்டல் தமிழ்நாடு வளாகத்திலிருந்து அன்றைய தினமே அப்புறப்படுத்துதல் வேண்டும்.
- GST -வரி 18% கண்டிப்பாக வசூல் செய்யப்படும்.
- **ஒப்பந்தப்புள்ளி மற்றும் நேரடி ஏலத்தில் கலந்துக்கொள்ள விரும்புபவர்கள் PAN Card எண் மற்றும் ஆதார் அட்டை நகல் கட்டயமாக இணைக்கப்பட வேண்டும்.**

- **ஏல முன்பணம் அல்லது ஒப்பந்தப்புள்ளி வரைவோலை செலுத்தாதவர்கள் ஏலத்தில் கலந்துக் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**
- ஏலத்தேதியை மாற்றவோ, ஏலத்தை ரத்து செய்யவோ, கூடுதல் கேட்டவர்களுக்கு மறுக்கவோ நிர்வாகத்திற்கு முழு உரிமையும் உண்டு. இதுபற்றி நிர்வாகம் எடுக்கும் முடிவே இறுதியானது.
- ஏலம் கோராதவர்களுக்கு அவர்கள் கட்டிய டெபாசிட் பணம் திருப்பி அளிக்க இயலாது.
- இந்த பகிரங்க ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மீதான எந்தவொரு பிரச்சனைக்கும் நிர்வாகத்தின் முடிவே இறுதியானது.
- பழைய பொருட்கள் எந்த நிலையில் உள்ளதோ, அந்த நிலையிலேயே ஏலம் விடப்படும்.
- ஏலம் விடப்படும் பொருட்கள் ஓட்டல் தமிழ்நாடு, உதகை வளாகத்தில் 8.10.2018 **காலை 11.00 மணி முதல்** அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
- ஏலம் முடிந்த பின்பு ஏலம் எடுக்க முடியாத நபர் செலுத்திய வரைவோலை திருப்பி அளிக்கப்படும்.
- அதிகாரிகளின் குழுவினரால் இறுதியாக அங்கீகரிக்கப்பட்ட ஏலத்தாரர் தாம் கோரிய ஏலத்தொகையில் ஏலம் கேட்கப்பட்ட தினத்தில், முன் வைப்புத்தொகையை கழித்து கொண்டு மீதமுள்ள தொகை முழுவதையும் ஏலம் அங்கீகரிக்கப்பட்ட அன்றைய தினமே ரொக்கமாக அலுவலகத்தில் செலுத்தி விட்டு அன்றைய தினமே ஏலப் பொருட்களை எடுத்து செல்ல வேண்டும். மொத்த தொகைக்கு உரிய GST 18%-வரியையும் சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.
- குறிப்பிட்ட காலவரையறைக்குள் முழு தொகையினை செலுத்தப்படாவிட்டால் அங்கீகரித்த உத்தரவை ரத்து செய்து மறு ஏலம் நடத்தப்படும் . அத்துடன் ஏல அங்கீகாரம் பெற்ற நபரின் முன்வைப்புத் தொகையை சுற்றுலா வளர்ச்சிக்கழகம் திருப்பித் தரப்படமாட்டாது.
- ஏலத்தொகையினை முழுவதும் கட்டியபின் ஏலத்தில் எடுத்த பொருட்களை உடனே அவர்களின் சொந்த செலவில் எடுத்துச்செல்ல வேண்டும்.
- இதர விபரங்களையும் நிபந்தனைகளையும் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்துக்கொள்ளவும்.

நாள் :- 26.09.2018
இடம்:-உதகை

**மண்டல மேலாளர்,**
**ஓட்டல் தமிழ்நாடு, உதகை.**

**நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:-**

1. மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர், அலுவலகம், உதகை.
2. வட்டாட்சியர், வட்டாட்சியர், அலுவலகம், உதகை.
3. நகராட்சி ஆணையர், நகராட்சி, அலுவலகம், உதகை.

------- ஒப்பந்த அறிவிப்பினை தங்களது அலுவலக அறிவிப்பு பலகையில் பொது மக்களுக்கு தெரியும் வண்ணம் வைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.----

**நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:-**

1. உதவி முதன்மை மேலாளர், த.சு.வ.கழகம், சென்னை.
2. மேலாளர்(தணிக்கை) த.சு.வ.கழகம், சென்னை.
3. மண்டல கணக்கு அலுவலர் (வ), த.சு.வ.கழகம், கோவை.
4. உதவி செயற்பொறியாளர் (சிவில்), த.சு.வ.கழகம், உதகை.

# <u>தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம்</u>

## <u>ஓட்டல் தமிழ்நாடு, உதகமண்டலம்.</u>

**<u>ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் கலந்துக்கொள்பவரின் உறுதிமொழி</u>**

**1.** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் ஓட்டல் தமிழ்நாடு, உதகைக்கு சொந்தமான உபயோகத்திற்குப் பின் கழித்து ஒதுக்கிய இரும்புச்சாமான்கள், மரச்சாமான்கள், பழைய உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள், மின் சாதன பொருட்கள் ஆகியவற்றை பொது ஏலம் விடுவதையும், டெண்டா் கோருவதையும், அதன் விதிமுறைகளையும், சட்டத்திட்டங்களையும் நான் படித்து தெரிந்துக் கொண்டேன். விதிமுறைகளுக்கும், சட்டத்திட்டங்களுக்கும் சம்மதித்து இந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்கிறேன்.

**2.** ________அன்று காலை ____மணியளவில் ஓட்டல் தமிழ்நாடு உதகையில் ஏலம் விடப்படவுள்ள பொருட்களை நான் அலுவலக நேரத்தில் பார்வையிட்டேன்.

2.(A) நான் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் கலந்துக்கொள்ள இத்துடன் ---------------------------- வங்கி, -------------------------- கிளை வரைவோலை எண்.-------------- நாள்---------------------- ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) இணைத்துள்ளேன்.

**3.** நான் பார்வையிட்டப்படி பழைய பொருட்களை கீழே குறித்துள்ள தொகைக்கு எடுத்துக்கொள்ள சம்மத்திக்கிறேன். விலைப்புள்ளி தொகை **ரூ.**
(**ரூபாய்** ______________________________________________மட்டும்.)

**4.** **18 % GST** வரியை செலுத்தி நான் எடுத்துக் கொள்ள் சம்மதிக்கிறேன்.

5. ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் கலந்துக்கொள்பவரின் PAN CARD எண் மற்றும் ஆதார் அட்டை நகல் கட்டயமாக இணைக்கப்பட வேண்டும் என்பதை நான் படித்து தெரிந்து கொண்டேன்.

**6.** முழுத்தொகையும் எனக்கு டெண்டா் கிடைத்த அன்றே செலுத்தி ஓட்டல் தமிழ்நாடு, உதகை வளாகத்திலிருந்து அன்றைய தினமே எனது சொந்த செலவில் எனது பொறுப்பில் பொருட்களை எடுத்துச் செல்ல சம்மதிக்கிறேன்.

7. பொது ஏலத்தில் கலந்து கொண்டாலும் வைப்புத்தொகை தனியாக வரைவோலை எடுத்து கொடுத்து விடுகிறேன் என சம்மதிக்கிறேன்.

8. ஒப்பந்தப்புள்ளி படிவம் **10.10.2018 காலை 11.00 மணிக்கு** முன்னதாக பூர்த்தி செய்து அதற்கான உள்ள பெட்டியில் சேர்க்க சம்மதிக்கிறேன்.
9. 10.10.2018 அன்று காலை பொது ஏலம் முடிந்த பின்னரே ஒப்பந்தப்புள்ளி படிவம் திறக்கப்படும் என்பதை நான் அறிந்துக்கொண்டேன்.
10. பொது ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் யாா் அதிக தொகைக்கு கேட்கிறாா்களோ, அவா்களுக்கே பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் நான் தெரிந்து கொண்டேன் .
11. பொருட்களை ஏலத்திலோ, ஒப்பந்தப்புள்ளி மூலமாகவோ அதிக தொகைக்கு கேட்பவா்களுக்குத்தான் கொடுக்கப்படும் என்பதையும், இறுதி முடிவு தமிழ்நாடு சுற்றுலா வளா்ச்சிக் கழக அதிகாரியின் முடிவிற்கு கட்டுப்பட்டது என்பதையும் நான் நன்கு அறிவேன்.
12. 3- வது சாரம்சத்தின்படி தொகை நிா்ணயம் செய்து அனுப்பிய பின் மாற்றவோ அல்லது திரும்ப பெறவோ இயலாது என்பதை நான் அறிவேன்.

**நாள்- 10.2018.**

**கையொப்பம்**
**முகவரி மற்றும் செல்போன் எண்.**

**இடம் -**